**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம் - மேலதிக நிதியளிப்பு - 2023**

---

சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம் - மேலதிக நிதியளிப்பின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 ஒக்தோபர் 07 ஆம் திகதிய எல்4121-எஸ்ஆர்ஐ ஆம் இலக்க மற்றும் ஜீ9222-எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் மத்திய, வட மத்திய, சபரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் நான்கு மாகாண சபைகள் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. தற்போதைய மூன்றாவது அலையான கொவிட் - 19 தொற்றுநோய் முகாமைத்துவம் காரணமாக மூல செயற்திட்டத்தின் மூல நோக்கெல்லையை அமுல்ப்படுத்தி, மேலும் அதிகரித்து வரும் கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு மேற்படி மீள்ஒதுக்கீடு காரணமாக ஏற்பட்ட நிதி பற்றாக்குறையை எதிர்கொள்ளுதல், கொத்தணி உச்ச மருத்துவமனைகளாக உருவாக்கப்படும் ஆரம்ப ஒன்பது செயற்திட்ட மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் ஒரு இரண்டாம் நிலை சிகிச்சை வசதியை (கொவிட்-19 விடய முகாமைத்துவத்திற்கானது உட்பட) உருவாக்குவதற்கு ஆதரவளித்தல், நாட்டில் அதிகரித்து வரும் கொவிட்-19 நிலைமையைக் கருத்தில் கொண்டு தொலைதூர மற்றும் மின்-கற்றலுக்கான வசதிகளை விரிவுபடுத்துதல், அளவிடப்பட்ட செயற்திட்டங்களின் விளைவுகளை வெற்றிகரமாக அமுல்ப்படுத்தி அடைந்துகொள்வதற்காக செயற்திட்ட இறுதித் திகதியை 24 மாதங்களால் அல்லது 2025 நவம்பர் வரை நீடித்தல் மற்றும் கொவிட்-19 தொடர்பான நிதி இடைவெளிகளை எதிர்கொள்வதற்கு ஐ.அ.டொலர் 3 மில்லியன் மானியத்தை வழங்குவதற்காக ஜப்பான் நிதிய வறுமைக் குறைப்பை அணுகுதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 24,538.5 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 123 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 22,543.5 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 113 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணங்கப்பட்டது. ரூபா 1,995.0 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2021 நவம்பர் 17 இல் தொடங்கியிருந்ததுடன் 2025 நவம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 பயன்படுத்தப்படாத வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், 07 செயற்பாடுகளுக்காக ரூபா 1324.23 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அது தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை. | சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் (மேலதிக நிதியளிப்பு) கீழ், செழிப்பான மற்றும் நெகிழ்வான ஆசியா & பசுபிக் (JFPR) இற்கான ஜப்பானிய நிதி ஐ.அ.டொலர் மூன்று மில்லியனை மானியமாக வழங்கியுள்ளது. 2023 ஆம் ஆண்டுக்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு, 2023 ஆம் ஆண்டில் இந்த நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடுகள் கோரப்பட்டன. எனினும் பல்வேறு காரணங்களால் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் தாமதமாகியதுடன் தற்போதைய நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

**2.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊவா மாகாணத்தில் 05 செயற்திட்டங்களின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 243.5 மில்லியன் ஆகும். எனினும் ஒப்பந்த பெறுமதி ரூபா 378 மில்லியன் ஆகும். இது மொத்த மதிப்பீட்டு பெறுமதியை விட 55 சதவீதம் அதிகமாகும், மேலும் சப்ரகமுவ மாகாணத்தில் 03 செயற்திட்டங்களின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 21 மில்லியன் ஆக இருந்தது. எனினும் ஒப்பந்த பெறுமதி ரூபா 25.6 மில்லியன் ஆக இருந்தது. இது மொத்த மதிப்பீட்டை விட 22 சதவீதம் அதிகமாக இருந்தது. | இந்த மதிப்பீடுகள் அனைத்தும் 2022 ஆம் ஆண்டில் பொருளாதார நெருக்கடிக்கு முன்னதாகவே வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசகர்களால் (RDC) தயாரிக்கப்பட்டது. பொருளாதார நெருக்கடியின் உச்சக்கட்டத்தில் கேள்விகள் அழைக்கப்பட்டதுடன் பொருள் விலைகளில் முன்னோடியில்லாத அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு அனைத்து விலைமனுக்களும் கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்டதுடன் விலைமனுக்கள் பொறியியலாளர்கள் மதிப்பீட்டை விட அதிகமாக இருந்தன. எனினும், பொறியியலாளர் மதிப்பீடுகள் அந்தக் காலப்பகுதியில் ஏற்பட்ட பொருள் விலை ஏற்ற இறக்கங்களைக் கருத்தில் கொண்டு திருத்தப்பட்டு, குறைந்த பதிலளிக்கக்கூடிய கேள்விதாரர்களுக்கு ஒப்பந்தங்களை வழங்குவதற்கு முன்னர் கேள்வி விலைகளுடன் ஒப்பிடப்பட்டன. இந்த ஒப்பந்தங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையில் விலை வேறுபாடுகள் நியாயப்படுத்தப்பட்டுள்ளன, மேலும் வழங்கப்பட்ட ஒப்பந்த பெறுமதிகள் திருத்தப்பட்ட பொறியியலாளர் மதிப்பீடுகளுக்கு இணையாக இருந்தன. | மதிப்பீடுகளை திருத்தும் விடயத்தில், மீள்கேள்வி அழைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், நான்கு மாகாணங்கள் தொடர்பாக ஆரம்ப சுகாதார சேவைகளின் அபிவிருத்தியின் கீழ் 42 மருத்துவமனைகளின் சிவில் பணிகளுக்காக ரூபா 837.68 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், மீளாய்வாண்டின் போது ஒதுக்கீட்டில் 11 சதவீதமே பயன்படுத்தப்பட்டுள்ளது. | சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் (மேலதிக நிதியளிப்பு) கீழ் நான்கு மாகாணங்களில் உள்ள நாற்பத்தியிரண்டு ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவுகள் (PMCU) மற்றும் ஆதார வைத்தியசாலைகள் (BH) ஆகியவற்றின் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கு செயற்திட்டம் திட்டமிட்டுள்ளதுடன் இந்த சிவில் வேலை ஒப்பந்தங்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டது. எனினும், சிவில் பணி ஒப்பந்தங்களை வழங்குவதில் தாமதம் மற்றும் ஒப்பந்ததாரர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சிக்கல்களால் நிர்மாணப் பணிகள் மெதுவாக இடம்பெறுவதால், ஆண்டுக்கான ஒதுக்கீடு குறைவாகவே பயன்படுத்தப்பட்டது. எனினும், ஒன்பது மருத்துவமனைகளின் பணிகளை பூர்த்தி செய்துள்ளோம், பதினான்கு மருத்துவமனைகளில் பணிகள் இடம்பெற்று வருகின்றன. பன்னிரண்டு நிறுவனங்களில் பெறுகை செயன்முறை நடைபெற்று வருகிறதுடன் நிதி பற்றாக்குறை காரணமாக ஏழு நிறுவனங்களை திட்டத்தில் இருந்து நீக்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. | இலக்கை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) மீளாய்வாண்டில் 127 கள சுகாதார நிலையங்களுக்கு (FHC) ரூபா 1010.14 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 56.01 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | நான்கு மாகாணங்களிலும் நூற்று இருபத்தேழு கள சுகாதார நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்த செயற்திட்டம் திட்டமிட்டுள்ளது. இவை பெரும்பாலும் மறுசீரமைப்பு & மேம்பாடுகள் மற்றும் விருது வழங்குவதில் தாமதம் மற்றும் மெதுவான முன்னேற்றம் ஆகியவை 2023 ஆம் ஆண்டில் நிதியின் குறைவான பயன்பாட்டை விளைவித்துள்ளன. எனினும், நாங்கள் இருபத்தி ஒன்பது கள சுகாதார நிலையங்களை பூர்த்தி செய்துள்ளதுடன் ஒன்பது நிலையங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. தெரிவுசெய்யப்பட்ட கள சுகாதார நிலையங்களில் ஆறு ஏற்கனவே ஏனைய நிதி வளமூலங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளன. அறுபத்து மூன்று கள சுகாதார நிலையங்களில் பெறுகை செயன்முறை இடம்பெற்று வருகிறது, நிதி பற்றாக்குறை காரணமாக இருபத்து ஒரு நிலையங்களை பட்டியலில் இருந்து நீக்கியுள்ளோம். | இலக்கை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2012 திசெம்பர் 05 ஆம் திகதிய ஏஎம்பி/12/1602/509/005-11 ஆம் இலக்க அமைச்சரவை முடிவின் பிரகாரம், அரசாங்க மருத்துவமனைகளுக்கு வருடாந்தத் தேவையான அறுவைசிகிச்சை துணி (surgical gauze) உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட வேண்டும், எனினும், 2022 ஆம் ஆண்டில் மருத்துவ வழங்கல் பிரிவு சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் மூலம் ரூபா 268 மில்லியன் பெறுமதியான 03 மில்லியன் மீற்றர் சத்திரசிகிச்சை துணியை இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தது. | சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் மூலம் பன்னிரெண்டு மில்லியன் மீற்றர் Gauze Absorbent ஐ கொள்வனவு செய்வதற்கு மருத்துவ விநியோக பிரிவு முடிவு செய்துள்ளதுடன் மேலதிக செயலாளரால் (பெறுகை) 2022 ஆகஸ்ட் 05 இல் அங்கீகாரம் வழங்கப்பட்டது. எனினும், கௌரவ அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் Gauze Absorbent இன் உள்ளூர் வழங்குநர்களின் கோரிக்கையின் பேரில் இந்த உத்தரவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. 202 ஆகஸ்ட் 19 இல் சுகாதார அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ளத் தயாராகும் வகையில், மூன்று மாதங்களுக்கு மூன்று மில்லியன் மீற்றர் Gauze Absorbent ஐ ஒரு பாதுகாப்பு இருப்பாகக் கொள்வனவு செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டது. | விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். |